පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
**UNIVERSITY OF PERADENIYA**

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொலை தொடர் கல்வி நிலையம்
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

දෙවන වසර ශාස්ත්‍රවේදී උපාධි පරීක්ෂණය (බාහිර - නව නිර්දේශය)
නොවැම්බර් 2019
**இரண்டாம் வருட கலைத்தேர்வு பரீட்சை (வெளிவாரி - புதிய பாடத்திட்டம்)**
**நவம்பர் - 2019**
2nd YEAR (200 LEVEL) EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL - NEW SYLLABUS) NOVEMBER 2019

# SUPE 203

## பிரயோக ஒழுக்கவியல்

**ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.
**நேரம்:** 03 மணித்தியாலம்
மொத்தம் 10 வினாக்கள் உள்ளன.

---

01) பிரயோக ஒழுக்கவியலின் நோக்கங்களையும் சமூகப் பயன்பாட்டையும் பயன்படுத்திப் பிரயோக ஒழுக்கவியலின் பரப்பினைப் பரிசீலிக்குக.

02) **"மரபணுப் பொறியியல் தொழில்நுட்பவியல் மூலம் பல்வேறு வகைகளில் நாம் பயன்களைப் பெற்றுள்ள போதும் மனிதப் படியெடுத்தல்(Cloning) ஆனது மனித சமூகத்தில் பாரிய ஒழுக்கப் பிரச்சினைகளை உருவாக்கும்"** ஆராய்க.

03) **ஒன்றில்**
மரண தண்டனை சமுதாயத்தில் இருந்து ஒழிக்கப்படவேண்டும் என்று நீர் கருதுகின்றீரா? விளக்குக.
**அல்லது**
சிறுவர் தவறான பிரயோகத்தையும் தவறான பிரயோகத்தில் இருந்து(Abuse) சிறுவர்களைப் பாதுகாக்கும் முறையையும் அறிமுகம் செய்க.

04) **"கருக்கலைப்பைச் சட்ட பூர்வமாக்குவது காலத்தின் தேவையாகும்"** உமது விடைக்கு நியாயங்கள் தந்து இக் கோரிக்கைக்கான உமது நிலைப்பாட்டை விளக்குக.

05) இலங்கையின் தற்போதைய ஊடகச் செயற்பாடுகளில் எரியும் ஒழுக்கவியல் பிரச்சினைகளை விமர்சன ரீதியில் பரிசீலிக்குக.

06) ஹிப்போக்கிரட்டீஸின் ஆணையிலிருந்து நான்கு ஒழுக்க விதிகளைக் கூறித் தற்போதைய உலகின் வைத்தியச் செயற்பாடுகளில் இவற்றைப் பின்பற்றுவதில் எவ்வளவு தூரம் வெற்றி காணப்பட்டுள்ளது என்பதைப் பரிசீலிக்குக.

07) "சுகமரணம்" என்ற எண்ணக்கருவை நீர் எவ்வாறு விளங்கியுள்ளீர்? இந்த வைத்திய முறையினை எமது நாட்டில் அறிமுகம் செய்யலாமா? உமது விடையை விளக்குக.

08) இலங்கையின் விவாகரத்துச் சட்ட வடிவம் இப்போதிருப்பதை விட மிகவும் நெகிழ்ச்சியானதாக இருக்கவேண்டும் என்று நீர் கருதுகின்றீரா? ஏன் அவ்வாறு கருதுகின்றீர் என்பதை விளக்குக.

09) **“விலங்குகள் மனிதர்களுக்கு அடிமையாவதற்காகப் பிறந்தவை அல்ல”** விலங்கு ஒழுக்கவியலைப் பொதுமக்கள் மத்தியில் தூண்டுதல் அளிப்பதற்காக செய்தித் தாளுக்கு ஒரு கட்டுரை எழுதுக.

10) கீழ்வருவனவற்றுள் எவையேனும் **நான்கு** பற்றிச் சிறுகுறிப்புக்களைத் தருக.

i. விளம்பரங்களினால் எழும் ஒழுக்கவியல் பிரச்சினைகள்
ii. சுற்றாடல் பிரச்சினை
iii. விளையாட்டும் ஒழுக்கவியலும்
iv. ஆய்வறிவு ஒழுக்கவியலும்(Academic Ethics) புலமைச் சொத்தும்
v. ஒழுக்கவியலைக் கற்பதன் முக்கியத்துவம்
vi. பாலினத் தேர்விற்கான உரிமை